**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.**
**சென்னை – 14.**

அனுப்புநர்

நிர்வாக அலுவலர்,
தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூக
பாதுகாப்பு மற்றும் நலவாரியம்,
ராயப்பேட்டை, சென்னை – 14

பெறுநர்

திரு. அ. ஜாஹிர் ஹீசைன்,
த/பெ. அமானுல்லா,
பொதுச் செயலாளர்,
உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம்,
எண்.3, கட்டதொட்டி சந்து, புது மார்கெட்,
மேற்கு தாம்பரம், சென்னை – 45.

ந.க. எண். **F1/3346/ 2020** நாள்.16.11.2020

பொருள்: முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு - திரு. அ. ஜாஹிர் ஹீசைன் என்பவர் ஓட்டுநர்கள் வாகன EMI மாத தவணை கட்டணத்தை உரிய நேரத்தில் கட்ட முடியாத சூழ்நிலை மற்றும் சில கோரிக்கைகளை நிறைவேற்ற கோருவது – தொடர்பாக.

பார்வை: 1. மனுதாரரின் மனு நாள்.23.03.2020.

2. முதலமைச்சரின் தனிப்பிரிவு கடித எண். 90880/2020 நாள்.29.08.2020 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.04.11.2020).

*******

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டு விடுதலின்றி புதுப்பித்துள்ள தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. மனுதாரர் கோரும் கடன் தவணைத் தொகை செலுத்த கால நீட்டிப்பு மற்றும் வாகன வரி செலுத்த இரண்டு மாத கால அவகாசம் வழங்க கோரும் கோரிக்கையானது இவ்வாரியம் தொடர்புடையதல்ல. தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு பெற்று விடுதலின்றி புதுப்பித்துள்ள தொழிலாளர்களுக்கு மட்டும் கொரோனா நிவாரண நிதி ரூ.2,000/– வழங்கப்படுகிறது. மேலும் தாங்கள் கோரிய ஓட்டுநர்களின் குடும்பங்களை காக்க இழப்பீடாக ரூ.20,000/– நிதி கோருவதென்பது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டது என்ற விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாக அலுவலர்.
தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள்
சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

Scanned By Scanner Go